பட்டம்பெற்று வெளியே வரக்கூடிய பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு கிடைப்பது என்பது அரிதாக இருக்கிறது. இந்த சூழ்நிலையில் புதியதொரு தோட்டக் கலைக் கல்லூரி துவங்குவது. சற்று சிரமமாக இருக்கிறது. அப்படி தேவைப்படுகின்ற காலத்தில் உறுப்பினருடைய கருத்தை அரசு பரிசிலனை செய்யும்.

டாக்டர் பெ. வீரபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டத்தில் கிட்டத்தட்ட மானாவாரி நிலங்கள் 6 லட்சம் ஏக்கருக்கு மேல்கூட இருக்கிறது. செங்கத்தில் மட்டும் கிட்டத்தட்ட ஒரு லட்சம் மானாவாரி நிலம் இருக்கிறது. மானாவாரி நிலத்தில் சரியாக விளைச்சல் வருவது கிடையாது. அது மழையின் தன்மையைப் பொறுத்தது. அதுமட்டுமல்ல, தோட்டக் கலைப் பயிர்கள் வளர அந்த இடம் ஏதுவாக இருக்கிறது. சாத்தியக்கூறு அங்கே அதிக அளவில் இருக்கிறது. நீடுதுயர் நீக்க பாடி வந்த நிலாவாக இருக்கின்ற நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவியின் நல்லாட்சியில் செங்கத்தில் தோட்டக் கலைக்கல்லூரி ஒன்றை ஏற்படுத்தினால் பக்கத்திலுள்ள தர்மபுரி, தென்னாற்காடு மற்றும் அம்பேத்கார் ஆகிய மாவட்டங்களும் பயன்படும். ஆகவே, அரசு இது அவசியம் என்பதால் கனிவுடன் பரிசீலிக்குமா என்று கேட்க விழைகின்றேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினருடைய கருத்தை அரசு பரிசீலித்து, அந்தப் பகுதியிலே தோட்டக் கலைப் பயிர்களை வளர்ப்பதற்கு அரசு பரிசீலிக்கும்.

முற்பகல் 10—50

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 136, டாக்டர் ஜெ. பரந்தாமன், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

136—

தேர்வுநிலைப் பேரூராட்சிகளுக்கு வீட்டுவசதி வாரியம் மூலம் வீடுகள் கட்டுதல்.

*9567 —டாக்டர் ஜெ. பரந்தாமன் :

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேர்வுநிலைப் பேரூராட்சிகளுக்கு வீட்டுவசதி வாரியம் மூலம் வீடுகள் கட்டித்தரும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் இருக்கிறதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் துவங்கும்?

1993 மார்ச் 18]

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) செயல்பட்டுக்கொண்டிருக்கிறது.

டாக்டர் ஜெ. பரந்தாமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் மக்களை கண்ணின் மணிகளாகப் பாதுகாக்கும் நம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசில் திறமைமிக்க அமைச்சர் 'ஆம்' என்று சொன்னதற்கு நன்றி. தேர்வுநிலை பேரூராட்சிகள் வளர்ந்து வரும் நகரங்கள். அங்கே வாடகைக்கு வீடுகள் கிடைக்காததால் பல அரசு அதிகாரிகள் பேரூராட்சிகளுக்குப் பணி செய்ய வர மறுக்கிறார்கள். வந்தாலும் அடிப்படை வசதிகள் குறைவாக இருந்தால் உடனே மாறுதல் கேட்டு போய்விடுகிறார்கள். எனவே, அனைத்து மக்களின் நலன் கருதி எல்லா தேர்வுநிலை பேரூராட்சிகளுக்கும் ஒரு குறிப்பிட்ட கால அளவை நிர்ணயித்து அந்தக் கால அளவிற்குள் வீடுகள் கட்டித் தர ஆவன செய்ய முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிய காரணத்தால்தான் சுமார் 500 சிறிய மற்றும் நடுத்தர நகரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவற்றிலே குடியிருப்புத் திட்டங்களைச் செயல்படுத்த வேண்டுமென்று அரசு ஆணை இருக்கிறது. இந்தத் திட்டத்தின் முதற்கட்டமாக சுமார் 20 மாவட்டங்களில் 120 நகரப் பகுதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு வீட்டு வசதிக்கான தேவை நிர்ணயம் செய்யப்பட்டது. இவற்றிலே 77 பகுதிகளுக்கு மட்டுமே போதிய தேவை பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்த அடிப்படையில் இந்த 77 நகரங்களிலும் தற்போது வீட்டு வசதித் திட்டம் செயல்முறைப்படுத்தப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த 77 நகரப் பகுதிகளில் வீட்டு வசதித் திட்டம் முடிவடைந்த பிறகு இரண்டாம் கட்டமாக 83 நகரப் பகுதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு வீட்டு வசதிக்கான தேவையை நிர்ணயம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் ஜெ. பரந்தாமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரிய நகரங்களில் மக்களின் அடிப்படை வசதிகளை அதிகரிக்கும் வகையிலும், மக்களின் நெரிசலைக் கட்டுப்படுத்தும் பொருட்டும் ஒன்றைக் கூற விரும்புகிறேன். நகரப் பகுதிகளில் மனைகளின் விலை மிக அதிகமாக இருக்கிறது. பக்கத்திலே உள்ள பேரூராட்சிப் பகுதியிலே விலை குறைவாக இருக்கிறது. உதாரணமாக சில அடிகள் தூரத்திலே உதயேந்திரம்

பேரூராட்சியும், வாணியம்பாடி நகராட்சியும் அமைந்துள்ளன. வீட்டு மனைகள் மிகக் குறைந்த விலைக்கு உதயேந்திரம் பேரூராட்சியில் கிடைப்பதால், இப்படிப்பட்ட நகராட்சிப்-பேரூராட்சிப் பகுதிகளை இணைத்து, குறைந்த செலவில் அதிக வீடுகள் கட்ட முடியும் என்பதால், பேரூராட்சிகளிலே வீடுகள் கட்டும் திட்டம் வீட்டு வசதி வாரியத்திடம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்ட 77 நகரப் பகுதி என்று சொல்வதில் தேர்வு நிலைப் பேரூராட்சியும் அடங்கும். அந்த அடிப்படையில் வாணியம்பாடியில் தற்போது நிலம் ஆர்ஜிதத்தில் இருக்கிறது. கூடிய விரைவிலே வாணியம்பாடிக்கு அந்த வீட்டு வசதித் திட்டம் வழங்க இருக்கிறதென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. என். பன்னீர் செல்வம்.

திரு. என். பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக 77 தேர்வுநிலைப் பேரூராட்சிகளில் அனுமதிக்கப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறினார்கள். அதில் தஞ்சை மாவட்டத்திலே ஆடுதுறை பேரூராட்சி அடங்கி இருக்கிறதா? அப்படி இல்லை என்றால் எப்போது அந்த வேலை அங்கே நடக்கும் என்பதைத் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுவாக இது எல்லாப் பேரூராட்சிகளுக்கும் உள்ளது. ஆடுதுறைக்குத் தனிக் கேள்வி போடவும். திரு. எ. சம்பத்.

திரு. எ. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாணியம்பாடி நகரத்தில் வீட்டு வசதி வாரியத்தின் சார்பாக வீடுகள் கட்டப்படுமென்று மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறினார்கள். அதற்காக என்னுடைய சார்பாகவும், மக்கள் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு எந்த வருடம் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு—அம்பேத்கார் மாவட்டத்தில் மட்டும் 3 நகரங்கள் தேர்வு செய்யப்பட்டிருக்கின்றன. அதில் வாணியம்பாடி, காட்பாடி, காவேரிப்பாக்கம் போன்ற நகரங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. தற்போது மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்வி வாணியம்பாடியில்

1993 மார்ச் 18]

எந்த நிலையில் அந்த வீட்டு வசதித் திட்டத்தின் செயலாக்கம் இருக்கிறது என்பதுதான். வாணியம்பாடியில் நில ஆர்ஜிதம் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. நில ஆர்ஜிதப் பணி முடிவுற்றவுடன் உடனடியாக அந்தப் பகுதியில் வீட்டு வசதித் திட்டம் செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 137, திரு. கே. செல்வராஜ், மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்.

137 —

சத்துணவுக் கூடங்களில் பணிபுரியும் பட்டதாரி அமைப்பாளர்கள்.

*11887—திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சத்துணவுக் கூடங்களில் பணிபுரியும் அமைப்பாளர்களில் பட்டதாரிகளாக உள்ள அமைப்பாளர்களை அரசுப் பணிகளில் சேர்த்துக் கொள்ள அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சத்துணவுக் கூடங்களில் பணிபுரியும் அமைப்பாளர்களில் பட்டதாரிகளாக உள்ள அமைப்பாளர்களை அரசு பணிகளில் சேர்த்துக் கொள்ளும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுக் கூடங்களில் பணி புரிகின்ற அமைப்பாளர்களில் ஆசிரியர் பயிற்சி பெற்றவர்களும், பட்டதாரிகளும் 30 சதவீதத்திற்கு அதிகமானவர்கள் இருக்கிறார்கள். வேலை கிடைக்காத காரணத்தால் அப்படிப்பட்ட பட்டதாரிகள் எல்லாம் சத்துணவுக் கூட அமைப்பாளர்களாக பணியாற்றி வருகிறார்கள். தமிழக அரசு சார்பில் அந்த சத்துணவுத் துறைக்கே அரசு அதிகாரிகள் நியமிக்கப்படுகிற போது அந்தத் துறையில்